# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 350 | 4 Pages | 12.7.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 350 | 4 பக்கங்கள் | 12.7.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## தமிழ்நாட்டில் தொடர் தோல்வி கண்ட பிறகும் மத்திய அரசு பாடம் கற்றுக்கொள்ளவில்லை: முதல்வர் மு.க.ஸ்டாலின்

தருமபுரி, ஜூலை 12

முதல்அமைச்சரின் முகவரி துறையின் கீழ் 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை கடந்த ஆண்டு (2023) டிசம்பர் மாதம் 18ம் தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். முதல் கட்டமாக இந்த திட்டம், நகர்ப்புறங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. அதற்காக நகர்ப்புறங்களில் ஒவ்வொரு வார்டு வாரியாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அரசின் 15 துறைகளின் கீழ் உள்ள 44 சேவைகள் பொதுமக்களுக்கு மிக எளிதாக வழங்கப்பட்டன.

அரசின் பல்வேறு துறைகளின் சேவைகளும் ஒரே இடத்தில் உடனடியாக கிடைத்ததால் பொதுமக்கள் மத்தியில் அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இந்த முகாம்கள் மூலம் மொத்தம் 8 லட்சத்து 74 ஆயிரம் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இந்த சூழ்நிலையில், ஊரக பகுதிகளிலும் 'மக்களுடன் முதல்வர் திட்டம்' செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி இடைத்தேர்தல் நடைபெற்ற விக்கிரவாண்டி தொகுதி தவிர தமிழகம் முழுவதும் ஊரக பகுதிகளில் இந்த முகாம் தொடங்கியது.

இந்த திட்டத்தை தருமபுரி மாவட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதற்கான விழா, நல்லம்பள்ளி அருகே உள்ள பாளையம்புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து உரையாற்றிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:




'மக்களுடன் முதல்வர்' திட்டத்தில் யாருக்கும் எந்த குறையும் இல்லாத வகையில் செயல்பட்டு வருகிறோம். 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் கீழ் 8 லட்சத்திற்கும் அதிகமான மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. அனைவர் வீட்டிற்கும் ஏதோ ஒரு வகையில் அரசின் திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்று பணியாற்றுகிறோம்.

தருமபுரி அரூர் அரசு மருத்துவமனையில் ரூ.51 கோடியில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படும். அரூர் பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்படும். பஞ்சப்பள்ளி அலியாளம் அணைக்கட்டு திட்டம் நிறைவேற்றப்படும். சிட்லிங், சித்தேரி கிராம மக்களுக்கு சிறுதானிய மதிப்பு கூட்டப்பட்ட தொழில்கள் ஏற்படுத்தப்படும். தீர்த்தமலையில் துணை வேளாண் விரிவாக்க மையம் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் தொடர்ந்து தோல்வி கண்ட பிறகும் மத்திய அரசு பாடம் கற்றுக்கொள்ளவில்லை. மத்திய அரசு விருப்பு, வெறுப்பு இல்லாமல் செயல்பட வேண்டும். எல்லாருக்குமான அரசாக இருப்பதுதான் எங்கள் தேர்தல் வெற்றியின் ரகசியம். இவ்வாறு அவர் கூறினார்.

## பிரச்சினைகளை சரி செய்யுங்கள்: எடப்பாடி பழனிசாமி பேச்சு

சென்னை, ஜூலை 12

2024 நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் முடிவுகள், தோல்வி குறித்து கட்சி நிர்வாகிகளுடன் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார். சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி பணிக்குழு பொறுப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தேர்தல் தோல்விக்கு பலமற்ற கூட்டணியே காரணம் என எடப்பாடி பழனிசாமியிடம் அதிமுக நிர்வாகிகள் முறையிட்டுள்ளனர். மேலும் மகளிர் உரிமை தொகை, விடியல் பயணத் திட்டம் போன்ற




திட்டங்களும் அதிமுகவின் தோல்விக்கு காரணம் என கூறியுள்ளனர். வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக பலமான கூட்டணியை அமைக்கவேண்டும்எனநிர்வாகிகள் பலரும் வலியுறுத்தியதாககூறப்படுகிறது.

2026 சட்டசபை தேர்தலிலும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்றும் சசிகலா, ஓபிஎஸ், டிடிவி தினகரன் உள்ளிட்டோரை மீண்டும் சேர்க்கும் வாய்ப்பு இல்லை எனவும் எடப்பாடி பழனிசாமி நிர்வாகிகளிடம் கூறியதாக சொல்லப்படுகிறது.

கூட்டத்தில் அதிமுக நிர்வாகிகளுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுரை வழங்கினார். அதன் விவரம் பின்வருமாறு:

கூட்டணிஅமைப்பதைதலைமை பார்த்துக் கொள்ளும். தேர்தல் வெற்றிக்கு பணியாற்றுங்கள். எங்கெல்லாம் பிரச்சினை இருக்கிறதோ அங்கெல்லாம் சரி செய்யுங்கள். நிர்வாகிகள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்; 2026 சட்டமன்றத்தேர்தலுக்கு தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்று கூறினார்.


## மருத்துவக் கல்வி வணிகமயமாவதை ஊக்குவிக்கும் நீட் தேர்வு உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்: அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூலை 12

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

"மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு அட்டவணை இதுவரை அறிவிக்கப்படாத நிலையில், தமிழ்நாட்டில் உள்ள நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை இடங்களை ஏலத்தில் விற்பனை செய்ய தொடங்கியுள்ளன. மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்காக நடப்பாண்டில் நடத்தப்பட்ட நீட் தேர்வு செல்லுமா? என்பதே இன்னும் தீர்மானிக்கப்படாத நிலையில், அதனடிப்படையில் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் போட்டிப் போட்டுக் கொண்டு மாணவர்களை சேர்ப்பது சுப்ரீம் கோர்ட்டை அவமதிப்பதாகும்.

நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு, சட்டவிரோதமாக கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டது, ஆள் மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகள் நடைபெற்றதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அவை தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, பெரிய அளவில் முறைகேடுகள் நடந்தது உறுதி செய்யப்படும் பட்சத்தில் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று எச்சரித்துள்ளது. அதன் காரணமாகவே மருத்துவ மாணவர் சேர்க்கை கலந்தாய்வுகளை மத்திய, மாநில அரசுகள் நிறுத்தி வைத்துள்ளன. இத்தகைய சூழலில் செல்லுமா, செல்லாதா? என்றே தெரியாத ஒரு தேர்வின் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்தப்படுவது எந்த வகையில் நியாயம்?



மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு தனியார் பல்கலைக்கழகங்களின் சார்பில் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. நீட் தேர்வில் வெற்றி பெற்றிருந்தாலே போதுமானது, மதிப்பெண்களைப் பற்றி கவலைப்படாமல் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் இடம் ஒதுக்கப்படும், மாணவர்கள் அவர்களின் விவரங்களை மட்டும் வழங்கினால் போதுமானது, பல்கலைக்கழக நிர்வாகமே கலந்தாய்வுக்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, மத்திய அரசால் நடத்தப்படும் கலந்தாய்வின் மூலம் கண்டிப்பாக இடம் கிடைப்பது உறுதி செய்யப்படும், முன்கூட்டியே பதிவு செய்து முன்தொகை செலுத்துவோருக்கு ரூ.5 லட்சம் வரை கட்டண சலுகை வழங்கப்படும் என்றெல்லாம் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தனியார் பல்கலைக்கழகங்களின் இத்தகைய செயல்பாடுகள் புதிதல்ல. நீட் தேர்வுகள் அறிமுகம் செய்யப்பட்ட நாள் முதல் நடைபெற்று வருபவை தான். தகுதி மற்றும் தரவரிசையை பற்றி கவலைப்படாமல் அணுகும் மாணவர்கள் அனைவருக்கும் மருத்துவ இடங்களை ஒதுக்குவது எவ்வாறு சாத்தியம்?

நீட் தேர்வில் 500 மதிப்பெண்கள் எடுத்தாலும் கூட பணம் இல்லாத மாணவர்களால் தனியார் பல்கலைக்கழகங்களில் ஆண்டுக்கு ரூ.25 லட்சம் வரை கட்டணம் செலுத்தி சேர முடியாது. அதே நேரத்தில் மதிப்பெண் குறைவாக எடுத்திருந்தாலும் பணம் இருந்தால்மருத்துவப்படிப்பில் சேர முடியும். இந்த தத்துவத்தின் அடிப்படையில் தான் தனியார் கல்லூரிகளை அணுகும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்கள் இடம் ஒதுக்குகின்றன. இது சமூக அநீதி ஆகும்.

தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் விலை வைத்து விற்பனை செய்யப்படுவதை தடுப்பதும், மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்துவதும் தான் அதன் நோக்கங்கள் என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. ஆனால், நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்ட நாள் முதல் ஓராண்டில் கூட இந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை. மருத்துவக் கல்வி வணிகமயமாக்குவதை ஊக்குவிக்கும் நீட் தேர்வு இனியும் தொடரக் கூடாது.

எனவே, நீட் தேர்வை மத்திய அரசு நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மத்திய நைஜீரியாவில் மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் 10 பேர் பலி

அபுஜா, ஜூலை 13

மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டில் ஐ.எஸ்., அல்கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மத்திய நைஜீரியாவின் தென் மத்திய மாநிலமான பெனுவில் கடந்த செவ்வாய்க்கிழமை (அதாவது 9ம் தேதி) பிற்பகுதியில் உள்ளூர் சமூகத்தின் மீது ஆயுதமேந்திய மர்ம நபர்கள் திடீரென மக்கள் கூடியிருந்த பகுதிக்குள் புகுந்து அதிரடியாக எல்லோரையும் நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இந்த தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் என்று உள்ளூர் அரசாங்க தலைவர் பிலிப் தெரிவித்தார்.

அந்த மர்ம நபர்கள் அதிநவீன ஆயுதங்கள் ஏந்தியிருந்தனர் என்றும் தெரிவித்தார். மேலும் அவர்கள் உள்ளூர் வாசிகளின் வீடுகளில் உள்ள உணவுப்பொருட்கள், கால்நடைகள் ஆகியவற்றை சூறையாடினர். அதே நேரத்தில் சுமார் 7 வீடுகளை தீ வைத்து எரித்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

## மத்திய நைஜீரியாவில் மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் 10 பேர் பலி



வியன்னா, ஜூலை 12

இந்திய பிரதமர் மோடி கடந்த 8ம் தேதி ரஷியா சென்றார். அங்கு அவர் ரஷிய அதிபர் புதினை சந்தித்தார். பின்னர் இருநாட்டு தலைவர்களும் 22வது இந்தியா ரஷியா உச்சி மாநாட்டில் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் இருநாட்டு உறவு, வர்த்தகம், ராணுவம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசித்தனர். பின்னர், உக்ரைன் போர் குறித்தும் விவாதித்தனர்.

ரஷிய பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி நேற்று ஆஸ்திரியா சென்றார். அங்கு அந்நாட்டு அதிபர் அலெக்சாண்டர் வான்டர் பெல்லன் மற்றும் பிரதமர் கார்ல் நெகம்மரை இந்திய பிரதமர் மோடி சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஆஸ்திரியாவாழ் இந்தியர்கள் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

இந்நிலையில், ரஷியா, ஆஸ்திரியா பயணத்தை முடித்த பிரதமர் மோடி இந்தியா புறப்பட்டார். தனி விமானம் மூலம் இந்தியா புறப்பட்ட பிரதமர் மோடி இன்று மாலை தலைநகர் டெல்லி வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிலிப்பைன்சில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 7.1 ஆக பதிவு

மணிலா, ஜூலை 12

தெற்கு பிலிப்பைன்சில் உள்ள சுல்தான் குடாரத் மாகாணத்தில் இன்று காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. உள்ளூர் நேரப்படி காலை 10.13 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.5 ஆக இருந்து அதன்பின்னர் 7.1 ஆக உயர்ந்ததாக பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நில அதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடலோர நகரமான பாலிம்பாங்கிலிருந்து தென்மேற்கே 133 கிலோமீட்டர் தொலைவில் 722 கிலோமீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மிண்டானாவோவ் நகரிலும், டவாவோ, ஆக்சிடெண்டல், டாவோ ஓரியண்டல், சாராங்கனி, டாவோ டி ஓரோ, டாவோ டெல் நோர்டே மற்றும் கோடாபாடோ ஆகிய இடங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை. நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்ததையடுத்து அச்சமடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

## ஆண் குழந்தை இல்லாததால் இரட்டைப் பெண் குழந்தைகளை கொன்று புதைத்த கொடூர தந்தை

புதுடெல்லி, ஜூலை 12

டெல்லி, சுல்தான்புரி பகுதியைச் சேர்ந்தவர் நீரஜ் சோலன்கி. இவருக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. தனக்கு ஆண் குழந்தை மட்டுமே பிறக்க வேண்டும் எனவும், அப்போதுதான் தனது சொத்துக்களை நிர்வகிக்க முடியும் எனவும் நீரஜ் உறுதியாக இருந்துள்ளார்.

இதனையடுத்து அவரது மனைவி பூஜா கர்ப்பமானார். இந்த நிலையில், கடந்த மே மாதம் 30ம் தேதி அவருக்கு அரியானா மாநிலம் ரோட்டக்கில் உள்ள ஒரு மருத்துவமனையில் இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன. இதனால் நீரஜ் மன உளைச்சலிலும், ஆத்திரத்திலும் இருந்துள்ளார். இதனை தொடர்ந்து கடந்த மாதம் 3ம் தேதி, பிறந்து சில நாட்களே ஆன இரண்டு பெண் குழந்தைகளின் சடலங்கள் புதைக்கப்பட்டு இருப்பதாக நபர் ஒருவர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மயானத்திற்கு சென்ற போலீசார், அதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்று குழந்தைகளின் உடலை தோண்டி எடுத்து பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். பின்னர் குழந்தைகளின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனிடையே போலீசார் குழந்தைகளின் உடலை தோண்டி எடுத்த தகவல் அறிந்ததும், நீரஜ் தலைமறைவானார். கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்த நிலையில், அவரது செல்போன் எண்களை கொண்டு போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில் நேற்று டெல்லி மற்றும் அரியானா மாநிலங்களின் எல்லைப் பகுதியான ரோட்டக் பகுதியில் பதுங்கியிருந்த நீரஜை, போலீசார் கைது செய்தனர். ஆண் குழந்தை இல்லாத விரக்தியில் இரண்டு பெண் குழந்தைகளையும் கொன்று புதைத்தாக நீரஜ் வாக்குமூலம் அளித்துள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நீட் முறைகேடு; அதிகாரிகளை ஏன் சோதனை செய்யவில்லை: மதுரை ஐகோர்ட்டு கேள்வி



மதுரை, ஜூலை 12

தமிழகத்தில் 2019ல் நடைபெற்ற நீட் தேர்வில் ஆள்மாறாட்டம் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆள்மாறாட்டம் செய்து சென்னையைச் சேர்ந்த மாணவர்கள் தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தது தெரியவந்தது. இதையடுத்து சிபிசிஐடி போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆள்மாறாட்டம் செய்தவர்கள், இதற்கு உதவிய பெற்றோர், இடைத்தரகர்கள் என பலரை கைது செய்தனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய தருண் மோகன், வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக்கோரி ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது தேசிய தேர்வு முகமை எதிர்மனுதாராக சேர்க்கப்பட்டது.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சிபிசிஐடி போலீசார் தாக்கல் செய்த அறிக்கையில், 2019ல் சென்னை, கோவை, சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களில் பலர் முகவரியில் டெல்லி, ராஜஸ்தான், மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தேர்வர்கள் ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதியுள்ளனர். ஒரு மாணவருக்கு ஒரே நாளில் 3 மாநிலங்களில் தேர்வு எழுதியிருக்கின்றனர்.

இந்த 3 தேர்வு மையங்களிலும் பெறப்பட்ட மதிப்பெண்ணின் எந்த மாநிலத்தில் அதிக மதிப்பெண் கிடைத்ததோ, அதன் அடிப்படையில் அரசு மருத்துவக் கல்லூரியில் சீட் பெற்றுள்ளார். ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய நபர்கள் குறித்த விவரங்களைக் கேட்டு தேசிய தேர்வு முகமைக்கு கடிதம் அனுப்பியும் இது வரை பதில் வரவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அரசு வழக்கறிஞர் ஆஜராகி, நீட் மோசடி வழக்கு தொடர்பாக தேசிய தேர்வு முகமை இதுவரை எந்தத் தகவலும் அளிக்கவில்லை. இதனால் விசாரணை மெதுவாகச் செல்கிறது எனத் தெரிவித்தார். தேசிய தேர்வு முகமை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வழக்கு குறித்து அறிக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் கோரினார்.

அப்போது நீதிபதி, வழக்குப்பதிவு செய்து 5 ஆண்டுகள் ஆகிறது. இந்தியாவிலேயே இல்லாத மாணவர் ஒருவருக்கு, மூன்று மாநிலங்களில் தேர்வு எழுதப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் திருமணமான மாணவிகளின் தாலியைக்கூட கழற்றச் சொல்லி சோதனை செய்கிறீர்கள். சிபிசிஐடி கேட்ட ஆள் மாறாட்டம் செய்து தேர்வு எழுதியவர்களின் ஆவணங்களை இதுவரை நீட் தேர்வை நடத்திய தேசிய தேர்வு முகமை வழங்கவில்லை.

இது தேர்வு முகமை ஆள்மாறாட்ட வழக்கின் குற்றவாளிகளுக்கு உடந்தையாகசெயல்படுகிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. நீட் தேர்வு முறைகேட்டில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படும் அதிகாரிகளின் வீடு, அலுவலகங்களில் ஏன் சோதனை நடத்த உத்தரவு பிறப்பிக்கக் கூடாது? இந்த நிலை தொடர்ந்தால் அவர்களை கைது செய்யவும் உத்தரவு பிறப்பிக்க நேரிடும் எனக் கூறினார். இதையடுத்து மத்திய அரசு தரப்பில், ஜூலை 15ல் பதிலளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது இதை ஏற்றுகொண்ட நீதிபதி விசாரணையை ஜூலை 15ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# சமூக வலைத்தளங்களில் முதல்அமைச்சருக்கு எதிராக அவதூறு பரப்பியவர் கைது

திருப்பூர், ஜூளை 12

திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே மடத்துக்குளத்தை அடுத்த ஜோத்தம்பட்டியைச் சேர்ந்த வர்பில்நெட் (வயது 51) நெசவுத்தொழில் செய்து வருகிறார். இவர் தமிழக முதல் அமைச்சர், சென்னை மாநகர கமிஷனர் அருண், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ஆகியோர் குறித்து சமூக வலைத்தளங்களில் அவதூறாகவும், ஆபாசமாகவும் தகவல்களை பதிவிட்டுள்ளார்.

மேலும் வெடிகுண்டு வைத்து பிரிவினைவாத, தீவிரவாத பிணங்களை கூவத்தில் எரிக்கும் படி இந்திய அரசு, ராணுவம் மற்றும் அனைத்து மாநில அரசு அனைத்து மாநில காவல்துறைக்கு உத்தரவு பிறப்பிக்கிறேன். குறிப்பாக தமிழ்நாட்டு காவல்துறைக்கு உத்தரவு பிறப்பிக்கிறேன் என்று சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் கணியூர் போலீசார் வர்பில் நெட் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். பின்னர் அவரை மடத்துக்குளம் ஜே.எம். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# 'கல்வராயன் மலைப்பகுதி மக்களின் தற்போதைய நிலை என்ன?' அரசுக்கு ஐகோர்ட்டு கேள்வி



சென்னை, ஜூலை 12

கள்ளக்குறிச்சி விஷ சாராய மரண சம்பவத்தை தொடர்ந்து கல்வராயன் மலைப்பகுதி மக்களின் மேம்பாடு தொடர்பாக சென்னை ஐகோர்ட்டு தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளது. இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம், நீதிபதி குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை கோரி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "கல்வராயன் மலைப்பகுதி 1976ல் தான் இந்தியாவுடன் இணைந்திருக்கிறது. 1996ல் தான் அந்த பகுதி மக்களுக்கு வாக்குரிமை கிடைத்திருக்கிறது.

அங்கு சுமார் 95 சதவிகித மக்கள் பழங்குடியின மக்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். மக்களின் வாக்குகளைப் பெற்ற பின் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் உள்ளதா? இல்லையா? என்பதை கவனிக்கவில்லை என்றால் அரசின் அரசியலமைப்பு கடமை என்ன? என்ற கேள்வி எழுகிறது" என்று தெரிவித்தார்.

இதையடுத்து இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு உதவியாக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் தமிழ்மணி, எவரேனும் அங்கு நேரில் சென்று ஆராய்ந்து அறிக்கை அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், "கல்வராயன்மலைப் பகுதி மக்களின் தற்போதைய நிலை என்ன? பட்டியலின, பழங்குடியின மக்களுக்கான அரசின் நலத்திட்டங்கள் அவர்களை சென்றடைகிறதா? என்பது குறித்து ஆராய்ந்து, வரும் 24ந்தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தனர்.

# திருத்தணி முதல் அரக்கோணம் மின்சார ரெயில் சேவை இன்று ரத்து



சென்னை, ஜூலை 12

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருத்தணியிலிருந்து இரவு 11.10 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரெயில் நாளை (வியாழக்கிழமை) மற்றும் 13ம் தேதி ரத்து செய்யப்படுகிறது. அரக்கோணத்தில் இருந்து காலை 4 மற்றும் 5 மணிக்கு புறப்பட்டு திருத்தணி செல்லும் மின்சார ரெயில் வரும் 12, 14 ஆகிய தேதிகளில் ரத்து செய்யப்படுகிறது.

மேலும், மூர்மார்க்கெட்டில் இருந்து இரவு 8.10 மணிக்கு புறப்பட்டு திருத்தணி செல்லும் மின்சார ரெயில் நாளை (வியாழக்கிழமை) மற்றும் 13ம் தேதி அரக்கோணம் திருத்தணி இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது. திருத்தணியிலிருந்து காலை 4.30 மற்றும் 5.30 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் வரும் மின்சார ரெயில் வரும் 12, 14 ஆகிய தேதிகளில் திருத்தணி அரக்கோணம் இடையே பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேளாண் பல்கலைக்கழக முதுநிலை படிப்புகளுக்கு நடந்த நுழைவுத் தேர்வு ரத்து: மாணவர்கள் அதிர்ச்சி

கோவை, ஜூலை 12

கோவையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில், முதுநிலை வேளாண் படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு கடந்த ஜூன் 23ந் தேதி நடைபெற்றது. இந்த தேர்வினை ஏராளமான மாணவர்கள் எழுதி, முதுநிலை படிப்பில் சேருவதற்காக காத்திருந்தனர். இந்த நிலையில் இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக தேர்வு எழுதிய மாணவர்களின் இமெயில் முகவரிக்கு நேற்று இரவு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் மாணவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இமெயிலில், ஜூன் 23ந்தேதி நடைபெற்ற தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் செலுத்திய விண்ணப்பக் கட்டணம் திரும்ப வழங்கப்படும். 20242025ம் கல்வி ஆண்டிற்கான முதுநிலை மாணவர்கள் சேர்க்கை நுழைவுத் தேர்வு குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நுழைவுத்தேர்வு திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது மாணவர்களிடையே குழப்பத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்பக் கோளாறு மற்றும் சாப்ட்வேர் பிரச்சினை காரணமாக தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், 10 நாட்களில் தேர்வு குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் பல்கலைக்கழக துணைவேந்தர் கீதா லட்சுமி தெரிவித்துள்ளார். மேலும், மாணவர்கள் சேர்க்கையில் தாமதம் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வார விடுமுறை: தமிழகம் முழுவதும் 950 சிறப்பு பஸ்கள் இயக்கம்




சென்னை, ஜூலை 12

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வருகிற 12ந் தேதி (வெள்ளிக்கிழமை), 13ந் தேதி (சனிக்கிழமை), 14ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 12ந் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று 265 பஸ்களும், 13ந் தேதி (சனிக்கிழமை) 325 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 12ந் தேதி வெள்ளிக்கிழமை 65 பஸ்களும் 13ந் தேதி சனிக்கிழமை 65 பஸ்களும் மேற்கூறிய இடங்களில் இருந்து இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும், வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு 12ந் தேதி (வெள்ளிக்கிழமை) 15 பஸ்களும், 13ந் தேதி (சனிக்கிழமை) 15 பஸ்களும் என 30 பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிளில் அழைத்துச்சென்று பெண்ணுக்கு பாலியல் தொல்லை



நாகை, ஜூலை 12

நாகை மாவட்டம் கீழ் வேளூர் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 59 வயதுமிக்க பெண் ஒருவர் வாரந்தோறும் பாப்பாகோவில் பகுதியில் உள்ள தர்காவுக்கு செல்வது வழக்கம். அதன்படி சம்பவத்தன்று தர்காவுக்கு சென்ற அவர் வீட்டுக்கு செல்வதற்காக ஆட்டோவுக்கு காத்திருந்தார்.

அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அந்த பெண்ணிடம் வீட்டுக்கு அழைத்து செல்வதாக கூறினார். அவரை நம்பி அந்த பெண்ணும் மோட்டார் சைக்கிளில் அவருடன் சென்றார். அப்போது அவர், அந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண் அவரிடம் இருந்து தப்பிப்பதற்காக புதுச்சேரி மெயின் ரோடு அருகே மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே குதித்தார். இதையடுத்து அந்த நபர் அங்கிருந்து தப்பி சென்றார்.

கீழே விழுந்ததில் காலில் பலத்த காயம் அடைந்த அந்த பெண்ணுக்கு நாகை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுகுறித்து அவர் அளித்த புகாரின்பேரில் கீழ்வேளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் மற்றும் போலீசார் வழக்குப்பதிவு செய்து பாலியல் தொல்லை அளித்த நபரை தேடி வந்தனர்.

இதுதொடர்பான விசாரணையில் மோட்டார் சைக்கிளில் அழைத்துச்சென்று பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்தது பாப்பாக்கோவில் அருகே உள்ள பெரிய நரியங்குடி பகுதியை சேர்ந்த சலூன் கடைக்காரர் குமரவேல் (வயது36) என்பது தெரியவந்தது. நேற்று சிக்கல் கடைத்தெருவில் நின்றிருந்த குமரவேலுவை தனிப்படை போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டிற்கு கள்ளச்சாராயம் கடத்தி வரப்படுவதை தடுப்பதில் காவல்துறை தோல்வி ராமதாஸ்



சென்னை, ஜூலை 12

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

புதுவை மாநிலம் மதகடிப்பட்டு பகுதியில் விற்பனை செய்யப்பட்ட கள்ளச்சாராயத்தை வாங்கி வந்து குடித்த விக்கிரவாண்டி தொகுதி மதுராபூரிகுடிசை கிராமத்தைச் சேர்ந்த 7 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கிறது.

மதுராபூரிகுடிசை கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல், பிரபு ஆகிய இரு தொழிலாளர்கள் புதுவை மாநிலம் மதகடிப்பட்டு கிராமத்திற்குச் சென்று கள்ளச்சாராயத்தை வாங்கி வந்து தங்கள் ஊரைச் சேர்ந்த ராஜா, சுரேஷ் பாபு, பிரகாஷ், காளிங்கராஜ் உள்ளிட்டோருடன் சேர்ந்து குடித்துள்ளனர். அடுத்த சில மணி நேரங்களில் 7 பேருக்கும் கடுமையான உடல்நல பாதிப்பு ஏற்பட்ட நிலையில், அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 2 நாள் தீவிர மருத்துவத்திற்குப் பிறகு 5 பேர் வீடு திரும்பி விட்ட நிலையில், மீதமுள்ள இருவர் கல்லீரல் பாதிப்புக்காக தொடர்ந்து மருத்துவம் பெற்று வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் கள்ளச்சாராயம் குடித்து 66 பேர் உயிரிழந்த நிலையில், தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதையும், கடத்தி வரப்படுவதையும் தடுக்க தமிழக காவல் துறை தவறிவிட்டது என்பதைபே இந்த நிகழ்வு காட்டுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் புதுவையில் இருந்து வாங்கிவரப்பட்ட கள்ளச்சாராயத்தைக் குடித்த முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில், தமிழககாவல்துறைவிழித்துக் கொண்டு எல்லைப் பகுதியில் சோதனையை வலுப்படுத்தி இருந்தால், மதுராபூரிகுடிசை கள்ளச்சாராய பாதிப்புகளை தடுத்திருக்க முடியும்.

ஆனால், புதுவையில் இருந்து கொண்டுவரப்படும் கள்ளச்சாராயத்தைத் தடுக்க தமிழக காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்காததால்தான் 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கள்ளச்சாராயக் கடத்தலை தடுப்பதில் தமிழக அரசும், காவல்துறையும் முற்றிலுமாக தோல்வியடைந்துவிட்டன. தமிழக அரசு இனியாவது விழித்துக் கொண்டு புதுவை உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு மது மற்றும் கள்ளச்சாராயம் கடத்தி வரப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். என்று தெரிவித்துள்ளார்.

# திருமணமான 6 மாதத்தில் கர்ப்பிணி தூக்குப்போட்டு தற்கொலை



சேலம், ஜூலை 12

சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே சின்னபுனல்வாசலை சேர்ந்த அழகுவேல் மகன் பிரதீஷ்குமார் (வயது 30). என்ஜினீயர். பெங்களூருவில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

இவருக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் தாலுகா உலகங்காத்தானை சேர்ந்த வேலு மகள் கவியரசி (24) என்பவருக்கும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. கவியரசி பயோமெடிக்கல் படித்து இருந்தார். தற்போது 5 மாத கர்ப்பமாக இருந்தார்.

கவியரசிக்கும், கணவர் வீட்டில் உள்ளவர்களுக்கும் தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. திடீரென தனது அறைக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்டார். நேற்று காலையில் நீண்ட நேரம் ஆகியும் அறையை விட்டு கவியரசி வெளியே வராததால் அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் கதவை தட்டிபார்த்தனர். கதவு திறக்கப்படவில்லை. உடனே கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு சேலையில் தூக்கில் தொங்கிய நிலையில் கவியரசி பிணமாக கிடந்துள்ளார்.

தகவல் அறிந்த கெங்கவல்லி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

கவியரசி உடலை மீட்டு ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே கவியரசி சாவுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க்கோரி கவியரசியின் உறவினர்கள் ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரி முன்பு திரண்டனர். அவர்களிடம் துணை போலீஸ் சூப்பிரண்டு சதீஷ்குமார் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது கவியரசி தாய் அருந்ததி போலீசாரிடம், எனது மகளிடம் பிரதீஷ்குமார், அவருடைய தாய் தங்கமணி, நாத்தனார் பிரதீபா ஆகிய 3 பேரும் வரதட்சணை கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். அதனாலேயே எனது மகள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளாள்.

மேலும் அவள் தற்கொலை செய்து கொண்டதாக கூறுகிறார்கள். ஆனால் நாங்கள் வரும்போது அவளது உடல் தரையில் படுக்க வைத்த நிலையில் இருந்தது. எனவே கவியரசி சாவில் எங்களுக்கு சந்தேகம் உள்ளது. இதுதொடர்பாக பிரதீஷ்குமார், அவருடைய தாய், அக்காள் ஆகிய 3 பேர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அவர்களிடம் கவியரசி சாவுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணை போலீஸ் சூப்பிரண்டு சதீஷ்குமார் உறுதி அளித்தார். அதன்பிறகு உறவினர்கள் சம்மதத்துடன் கவியரசி உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து கவியரசி சாவு தொடர்பாகபிரதீஷ்குமார், அவருடைய தாய் தங்கமணி, அக்காள் பிரதீபா ஆகிய 3 பேர் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மேலும் திருமணம் ஆகி 6 மாதங்களே ஆவதால் கவியரசு சாவு குறித்து உதவி கலெக்டர் அம்பாயிரநாதன் விசாரணை நடத்தி வருகிறார். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# இந்த சின்ன பையன் இனி என்ன செய்வான் என்று பாருங்க ஆர்.எஸ்.பாரதிக்கு சவால் விடுத்த அண்ணாமலை



சென்னை, ஜூலை 12
கள்ளக்குறிச்சி விவகாரத்தில் தன்னை பற்றி அவதூறு பேசியதாக தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மீது பா. ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் மானநஷ்டவழக்கு தொடர்ந்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அண்ணாமலை, "நான் அரசியலுக்கு வந்து 3 ஆண்டுகளாகியும் யார் மீதும் மான நஷ்ட வழக்கு தொடர்ந்ததில்லை. ஆர். எஸ்.பாரதியின் பேச்சு எல்லையை மீறி சென்று விட்டது.

சீனியரான மனிதர் ஒருவர், திராவிட முன்னேற்ற காலம் முடிவிட்டதன் காரணமாக, அவருடைய வாயில் இந்த பேச்சுக்கள் வர ஆரம்பித்து விட்டது. ஆர்.எஸ்.பாரதி மீது சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என நீதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன். அவரிடம் 1 கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டுள்ளோம். ஆர்.எஸ்.பாரதியிடம் இருந்து ரூ.1 கோடி பெற்று கள்ளக்குறிச்சியில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவேன். தி.மு.கவினர் திட்டி திட்டி அரசியல் பண்ணிட்டு இருக்காங்க. பயந்து போய் சாமானிய மக்கள் தி.மு.க.வை எதிர்ப்பது இல்லை. இதில், நாங்கள் நிச்சயமாக ஆர்.எஸ்.பாரதியை சிறைக்கு அனுப்புவோம்.

என்னை சின்னப் பையன் என்று கூறிய ஆர் எஸ் பாரதி இப்போது இந்த வழக்கின் மூலம் நான் யார் என்பதை புரிந்து கொள்வார். ஆர்.எஸ்.பாரதியின் ராசியான கைரேகையை இந்த சின்ன பையன் என்ன செய்வான் என்பதை இனி பார்க்க போகிறீர்கள். கண்டிப்பாக அவர் தண்டிக்கப்படுவார். நாய்கூட பி.ஏ. படிக்கிறது என்று அவதூறாக அவர் பேசியதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.

சிபிஐ விசாரித்தால்தான் டாஸ்மாக் ஊழல் வெளிவரும். மடியில் கனம் இருப்பததால்தான் சி.பி.ஐ. உள்ளே வரக்கூடாது என முன்அனுமதியைதி.மு.க. அரசு ரத்து செய்துள்ளது. ஆம்ஸ்ட்ராங் விஷயத்தில் உண்மையான குற்றவாளிகளை கைது செய்யவில்லை என திருமாவளவனே கூறுகிறார். இதில் முதல்அமைச்சர் சி.பி.ஐ. விசாரணைக்கு எதிராக இருப்பதன் மர்மம் என்ன? " என்று அவர் கேள்வி எழுப்பினார்.

# ரெயிலில் கடத்தி வரப்பட்ட ரூ.2 கோடி மதிப்பிலான பணம், நகைகள் பறிமுதல்; ஒருவர் கைது



திருச்சி, ஜூலை 12
திருச்சி ரெயில் நிலையத்தில் இன்று ரெயில்வே போலீசார் வழக்கமான பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சென்னையிலிருந்து திருச்சி வந்த மங்களூர் எக்ஸ்பிரஸ் ரெயிலில் வந்த பயணிகளை போலீசார் நிறுத்தி சோதனையிட்டனர். அப்போது லட்சுமணன் (வயது 25) என்பவர் வைத்திருந்த பையை சோதனையிட்ட போது, அதில் தங்க நகைகள், ரொக்கப்பணம் ஆகியவை இருந்துள்ளது.

இந்த பணம் மற்றும் நகைகள் குறித்து லட்சுமணனிடம் கேட்ட போது, அவர் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்துள்ளார். இதனால் சந்தேகமடைந்தபோலீசார், அவரை ரெயில் நிலைய போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று மேற்கொண்டு விசாரணை நடத்தினர். அப்போது நகை மற்றும் பணத்தை சென்னையில் இருந்து மதுரைக்கு கொண்டு சென்றதாக அவர் தெரிவித்தார். இதையடுத்து அவரை போலீசார் கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனை தொடர்ந்து வணிகவரித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்த பறிமுதல் செய்யப்பட்ட தங்க நகைகள் மற்றும் பணத்தை கணக்கிடும் பணியில் ஈடுபட்டனர். அதில் ரொக்க பணம் ரூ. 15 லட்சமும், ரூ.1 கோடியே 89 லட்சத்து 62 ஆயிரம் மதிப்பிலான 2.45 கிலோ தங்க நகைகளும் இருந்தது. இதன் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 4 லட்சத்து 62 ஆயிரம் என தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட நகைகள் மற்றும் பணம் வரி ஏய்ப்பு செய்யப்பட்டதா? அல்லது ஹவாலா பணமா என பல கோணங்களில் விசாரணை நடந்து வருகிறது. மேலும் இதன் பின்னணியில் இருப்பது யார் என்றும் விசாரணை நடத்தப்படுகிறது.

திருச்சி ரெயில் நிலையத்தில் ரூ.2 கோடி மதிப்பிலான தங்க நகைகள் மற்றும் ரொக்க பணம் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# டேங்கர் லாரி ஒப்பந்ததாரர்கள் வேலைநிறுத்தம் பெட்ரோல், டீசல் தடையின்றி கிடைக்க ஏற்பாடு

சென்னை, ஜூலை 12
இந்தியன் ஆயில் நிறுவன அதிகாரிகள் சர்வாதிகார போக்குடன் நடந்து கொள்வதாக கூறி சென்னைபகுதியில்இயங்கும் டேங்கர் லாரி ஒப்பந்ததாரர்கள் இன்று (புதன்கிழமை) ஒருநாள் வேலைநிறுத்த போராட்டத்தை அறிவித்துள்ளனர். இதனால்இந்தியன்ஆயில் பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படலாம் என கூறப்படுகிறது.

அதே வேளையில், வாடிக்கையாளர்களுக்கு தடையின்றி பெட்ரோல், டீசல் வினியோகம் செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் (பெருநிறுவன தொடர்பு) வெற்றி செல்வக்குமார் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், "சென்னையில் உள்ள பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல், டீசல் தடையின்றி கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளையும் இந்தியன் ஆயில் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்தியன் ஆயில் டீலருக்கு சொந்தமான டேங்கர் லாரிகள் மூலம் வழக்கம்போல் பெட்ரோல், டீசல் வினியோகம் நடைபெறும்.

இந்தியன் ஆயில் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு எந்தவித இடையூறும் இன்றி சேவை செய்ய உறுதி பூண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படாத வகையில் நிலைமையைச் சமாளிப்பதற்கும் தடையற்ற எரிபொருள் வினியோகத்தை உறுதி செய்யவும் இந்தியன் ஆயில் குழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது" என்று அதில் கூறப்பட்டு உள்ளது.

# ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் தி.மு.க. அரசு கல்வித்தரத்தை சீரழித்து வருகிறது: ராமதாஸ்



சென்னை, ஜூலை 12
பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் 2,994 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் உள்ளிட்ட 4,500 பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் இல்லை என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. அரசு பள்ளிகள் திறக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் அரசு பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படாதது கண்டிக்கத்தக்கது.

தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால், பொறுப்பு தலைமை ஆசிரியர்களாக பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பள்ளி மணி நேரத்தின் பெரும் பகுதியை தலைமை ஆசிரியர் பணிக்கான கடமைகளை நிறைவேற்றுவதிலேயே கழிப்பதால் அவர்களால் பாடங்களை நடத்த முடியவில்லை. அதனால் மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாததற்கு தமிழக அரசின் அலட்சியம் தான் காரணம் ஆகும். கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பாகவே பதவி உயர்வு கலந்தாய்வு மூலம் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அப்போதுதான் காலியாக உள்ள பிற ஆசிரியர் பணியிடங்கள் கணக்கிடப்பட்டு அவற்றை நிரப்ப முடியும். ஆனால், தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்குகளை நடத்துவதில் அரசு ஆர்வம் காட்டவில்லை. அதனால் தலைமை ஆசிரியர் பணியிடங்களையும், பிற ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசு பள்ளிகளில் ஏற்கனவே கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த நிலையில், தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாததால், இருக்கும் குறைந்த எண்ணிக்கையிலான ஆசிரியர்களையும்நிர்வாகப்பணிக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் அரசு பள்ளிகளில் கற்பித்தல் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அரசு பள்ளிகளின் கல்வித்தரத்தை உயர்த்தப்போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தி.மு.க., ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் கல்வித்தரத்தை மேலும் சீரழித்து வருகிறது. இந்த நிலையை மாற்றி, காலியாக உள்ள அனைத்துத் தலைமை ஆசிரியர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது மாநில அரசின் கடமை: ஓ.பன்னீர்செல்வம்



சென்னை, ஜூலை 12
தமிழக முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில், சமூக விரோதிகளால் மட்டுமல்லாது, கால்நடைகளாலும் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை அதிகரித்துள்ளது. கால்நடைகளால் ஏற்படும் ஆபத்தினைக்கூட கட்டுப்படுத்த இயலாத திறமையற்ற அரசாக தி.மு.க. அரசு விளங்குகிறது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம், வண்ணாரப்பேட்டை பகுதியில் ஒரு நாய் 29 நபர்களை கடித்துக் குதறியது. இந்த ஆண்டு மே 6ஆம் நாள் நுங்கம்பாக்கத்தில் உள்ள சென்னை மாநகராட்சி பூங்காவில், நாயினுடைய உரிமையாளர் முன்பே தாய், மகளை நாய் கடித்துக் குதறியது, இந்த ஆண்டு ஜூன் மாதம் மாங்காடு பகுதியில் நாய் கடித்து 11வது சிறுவன் பாதிக்கப்பட்டது என பல சம்பவங்கள் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

இதேபோன்று இந்த ஆண்டு ஜனவரி மாதம் மாடு தாக்கி நங்கநல்லூரைச் சேர்ந்த ஒருவர் இறந்தது. ஜூன் மாதம் மாடு முட்டி திருவொற்றியூரின் ஒரு பெண் படுகாயமடைந்தது. திருவல்லிக்கேணியில் மாடு முட்டி முதியவர் இறந்தது என பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து மாநகராட்சி சார்பில் எந்த

ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் சென்னை வண்ணாரப்பேட்டையில் மூன்றாவது படிக்கும் பத்து வயது சிறுவனை தெரு நாய் கடித்துக் குதறியதில் அந்தச் சிறுவனின் இடது பக்கத் தோள்பட்டையில் பலத்த காயமடைந்த நிலையில், அச்சிறுவன் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

கடந்த ஓராண்டில், சென்னையில் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மட்டும் கிட்டத்தட்ட 6,000 பேர் நாய் கடித்ததன் காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர். நாய் மற்றும் மாடுகளால் மனிதர்கள்மீது தாக்குதல் நடத்தப்படும்போது, அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு சார்பில் தகவல் அளிக்கப்படுகிறது.

இருப்பினும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. உண்மையிலேயே நடவடிக்கை எடுத்திருந்தால், பாதிப்புகள் குறைந்திருக்கும். ஆனால், அதற்கு மாறாக, தாக்குதல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சென்னையில் நாய் கணக்கெடுப்பு துவங்கியுள்ளதாக இன்றைக்கு பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. இது எந்த அளவுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது தெரியவில்லை.

பொதுமக்களின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது மாநில அரசின் கடமை என்பதைக் கருத்தில் கொண்டு, நாய் மற்றும் மாடுகளினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைக் களைய தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆனி திருமஞ்சனம் தரிசன விழா




கடலூர், ஜூலை 12
சிதம்பரம் நடராஜர் கோவிலில், மூன்று நாட்கள் ஆனி திருமஞ்சன விழா நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியின்போது பக்தர்கள், கனகசபை மீது நின்று சாமி தரிசனம் செய்ய அனுமதிக்க கோரி சம்பந்த மூர்த்தி ராமநாதன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன், நீதிபதி முகமது சபீக் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, கனகசபை மீது நின்று சாமி தரிசனம் செய்ய அனுமதித்து தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்தது. அந்த அரசாணையை எதிர்த்து ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு அந்த அரசாணைக்கு தடை எதுவும் விதிக்கவில்லை என்று இந்து சமய அறநிலையத் துறை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், கனகசபையில் இருந்து எத்தனை பேர் சாமி தரிசனம் செய்ய முடியும்?'' என்று கேள்வி கேட்டனர்.

அதற்கு அறநிலையத் துறை தரப்பு வக்கீல், '5 நிமிடத்துக்கு 12 பேர் தரிசனம் செய்யலாம்'' என்றார். உடனே நீதிபதிகள், 'அப்படியென்றால், ஒரு மணி நேரத்துக்கு 144 பக்தர்கள் மட்டுமே வழிபாடு நடத்த முடியும்? அங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரும்போது, அதை எப்படி சமாளிப்பீர்கள்? என்று சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

''முதலில் வந்தவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில்தான் பக்தர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்'' என்று அறநிலையத்துறைத் தரப்பு வக்கீல் விளக்கம் அளித்தார். இவற்றையெல்லாம் பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், 'கனகசபையில் நின்று சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கும் அரசாணைக்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை. அதனால், பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

இதில் விதிமீறல்கள் இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். யாராவதுசாமிதரிசனத்தை தடுக்கும் விதமாக சட்டத்தை கையில் எடுத்து செயல்பட்டால், அவர்களுக்கு எதிராக அறநிலையத் துறை சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பாக அடுத்த வாரம் அறநிலையத்துறை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

இந்தநிலையில், இன்று காலை முதல் சிதம்பரம் நடராஜர் கோவிலில் கனகசபை மீது ஏறி பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். பக்தர்கள் கனகசபை மீது ஏறி சாமி தரிசனம் செய்வதை இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: வாக்குச்சாவடியில் நின்றிருந்த பெண்ணுக்கு கத்திக்குத்து



விக்கிரவாண்டி, ஜூலை 12
விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தி.மு.க. சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்த நா.புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6ந் தேதி மரணம் அடைந்தார். இதையடுத்து, விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதன்படி ஆளும் கட்சியான தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். அ.தி.மு.க. போட்டியில் இருந்து விலகி கொண்டதால், தி.மு.க.வுக்கு போட்டியாக பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் டாக்டர் அபிநயா ஆகியோர் நிற்கிறார்கள். இவர்களுடன் சுயேச்சைகளையும் சேர்த்து மொத்தமாக 29 பேர் களத்தில் இருக்கிறார்கள்.அனல் பறந்த தேர்தல்பிரசாரம்நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில், இன்று காலை ஓட்டுப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பரபரப்பாக வாக்குப்பதிவு நடந்து வரும் நிலையில், டிகொசப்பாளையம் வாக்குச்சாவடியில் வாக்களிப்பதற்காக காத்திருந்த கனிமொழி (49) என்ற பெண் மீது கத்திக்குத்து சம்பவம் நிகழ்ந்துள்ளது. கனிமொழியை கத்தியால் குத்திவிட்டு தப்ப முயன்ற அவரது முன்னாள் கணவர் ஏழுமலை (52) போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையேஇரட்டை கொலை வழக்கில் சிறை சென்று வந்த நிலையில் மனைவி கனிமொழியை பல ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார் ஏழுமலை.மனைவிவேறொரு ஊரில் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் இடைத்தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊருக்கு முன்னாள்மனைவி கனிமொழி வந்த நிலையில், இந்த கத்திக்குத்து சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வாக்குப்பதிவு நடந்து வரும் நிலையில் நடத்தப்பட்ட இந்த கத்திகுத்து சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# எஸ்.எஸ்.எல்.வி.டி3 ராக்கெட்: 28ந் தேதி விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டம்

சென்னை, ஜூலை 12
சிறிய வகையிலான மைக்ரோ மற்றும் நானோ வகை செயற்கைக்கோள்களை தயாரித்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) முன்பு பி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளில் பொறுத்தி விண்ணில் ஏவி வந்தது. இதற்கு அதிக பொருட்செலவு ஏற்படுவதால் சிறிய வகை செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக, 'சிறிய செயற்கைக்கோள்களை சுமந்து செல்லும் ராக்கெட்' (எஸ்.எஸ்.எல்.வி.) ரக ராக்கெட்டுகளை இஸ்ரோ தயாரித்தது.

இவை செலவு குறைந்த ராக்கெட்டாகும். தொழில்துறை உற்பத்திக்காக இந்த வகை ராக்கெட்டுகள் அதிகம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சிறிய வகை செயற்கைக்கோள்கள் தேவைக்கு ஏற்ப தயாரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இது வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்ய உதவுகிறது.


தனித்துவமான இந்த வகை ராக்கெட்டுகள் 3 நிலை கட்டமைப்புகளை கொண்டிருக்கும். உந்துவிசைக்காக 3 நிலைகளிலும் திட எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. இவை வேகத்தை பயன்படுத்தி துல்லியமான சுற்றுப்பாதையில் செயற்கைக்கோள்களை நிலை நிறுத்தும் சக்தி படைத்தது.

இந்தவகையில் முதல் எஸ்.எஸ்.எல்.வி.டி.1 ராக்கெட், ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீஹரி கோட்டா, சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து கடந்த 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7ந் தேதி விண்ணில் ஏவப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த பணி அதன் நோக்கத்தை அடையவில்லை.

எனினும். இஸ்ரோ இந்த ராக்கெட்டில் இருந்து மதிப்புமிக்க பாடங்களைகற்றுக்கொண்டு, அடுத்து வந்த ராக்கெட்டில் அவற்றை பயன்படுத்தவும் திட்டமிட்டது. தொடர்ந்து எஸ்.எஸ்.எல்.வி. டி2 ராக்கெட் வகையில் மேம்படுத்தப்பட்ட ராக்கெட் வடிவமைக்கப்பட்டது. இதை கடந்த பிப்ரவரி 10ந் தேதி வெற்றிகரமாக இஸ்ரோ விண்ணில் ஏவியது. இந்த ராக்கெட்டில் இ.ஓ.எஸ்.07, ஜானஸ்1 மற்றும் ஆசாதிசாட்2 ஆகிய செயற்கைக்கோள்கள் பொறுத்தப்பட்டு வெற்றிகரமாக பூமியில் இருந்து 450 கி.மீ. தூரத்தில் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்து எஸ்.எஸ்.எல்.விடி3 ராக்கெட்டை, ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வருகிற 28ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வெற்றிகரமாக விண்ணில் ஏவ இஸ்ரோ விஞ்ஞானிகள் தயாராகி வருகின்றனர். இதன் மூலம் தொழில்துறையினருக்கு செலவு குறைந்த ராக்கெட்டுகளுக்கான கதவு திறக்கப்பட்டு உள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
12.7.2024



## 'கல்கி 2898 ஏடி' பட தயாரிப்பு நிறுவனத்தின் அடுத்த படத்தில் துல்கர் சல்மான்?

தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் துல்கர் சல்மான். இவர் மலையாள நடிகராக இருந்தாலும், இவரது திரைப்படங்களுக்கு தென்னிந்திய மொழிகளில் அதிக வரவேற்பு கிடைப்பது வழக்கமாகும்.

அவரது நடிப்பில் வௌியான 'சீதா ராமம்' திரைப்படம் ஏகபோக வரவேற்பை பெற்றது. இதையடுத்து அவர் நடித்த 'கிங் ஆப் கோதா' திரைப்படம் எதிர்பார்த்த வெற்றிஅடையவில்லை.பின்னர்,நாக்அஸ்வின்இயக்கத்தில்பிரபாஸ்ஹீரோவாக நடித்த 'கல்கி 2898ஏ.டி'படத்தில்துல்கர்சல்மான்கவுரவ வேடத்தில்நடித்துள்ளார். இப்படம் உலகம் முழுவதும் ரூ.1,000 கோடி வசூலை நெருங்கி வருகிறது.

தற்போது 'லக்கி பாஸ்கர்' படத்தில் நடித்துள்ளார். வெங்கி அட்லூரி இயக்கிய, இப்படம் செப்டம்பர் 7ந் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில், கல்கி 2898 ஏடி பட தயாரிப்பு நிறுவனமான வைஜெயந்தி மூவிஸ் தயாரிக்கும் அடுத்த படத்தில் துல்கர் சல்மான் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தை பவன் சதினேனி இயக்க இருப்பதாகவும், இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு துல்கர் சல்மானின் பிறந்த நாளான வரும் 28ந் தேதி வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

## 'குணா' திரைப்படத்தை ரீரிலீஸ் செய்ய தடை




சந்தான பாரதி இயக்கத்தில் நடிகர்கள் கமல்ஹாசன், ரோஷினி, ஜனகராஜ், ரோஹினி உள்ளிட்டப் பலர் நடிப்பில்,1991ம் ஆண்டு தீபாவளி அன்று வெளிவந்த படம் 'குணா'. சமீபத்தில் மலையாளத்தில் வெளியான 'மஞ்சுமெல் பாய்ஸ்' படம் மூலம் 'குணா' படம் 2கே கிட்ஸ் தலைமுறையிடமும் டிரெண்ட் ஆனது. 33 வருடங்கள் கடந்த பின்னரும் படத்தையும், அதன் பாடல்களையும் இன்றைய தலைமுறையினர் கொண்டாடிவருகின்றனர்.

குறிப்பாக, 'டெவில் கிச்சன்' என அழைக்கப்படும் குணா குகையில் படமாக்கப்பட்ட 'கண்மணி அன்போடு காதலன்...' பாடலும் இணையத்தைக் கலக்கியது. கமல்ஹாசன் திரையுலக வாழ்க்கையிலும், தமிழ் சினிமா வரலாற்றில் தவிர்க்க முடியாத திரைப்படமாக இருந்து வரும் 'குணா' திரைப்படம் டிஜிட்டல் வடிவத்தில், மெருகூட்டப்பட்டு ரீரிலீஸ் செய்யப்படுவதாக படக்குழு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், 'குணா' திரைப்படத்தை ரீரிலீஸ் செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது. கன்ஷியாம் என்பவர் 'குணா' பட மறு வெளியீட்டுக்கு தடை கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், குணா திரைப்படத்தை ரீரிலீஸ் செய்ய பிரமிட் மற்றும் எவர் கிரீன் மீடியா நிறுவனங்களுக்கு நிரந்தர தடை விதிக்க வேண்டும் என்றும் படத்தின் முழு உரிமையாளராக தன்னை அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை ஐகோர்ட்டில் இன்று இந்த மனு விசாரணைக்கு வந்தது. அதனை விசாரித்த நீதிபதி, 'குணா' திரைப்படத்தை ரீரிலீஸ் செய்ய இடைக்காலதடை விதித்து, மனுவுக்கு வரும் 22ம் தேதிக்குள் பதிலளிக்கும்படி பிரமிட் மற்றும் எவர் கிரீன் மீடியா நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார்.



## 'பேட் நியூஸ்' படத்தின் 2வது பாடல் வைரல்

பிரபல பாலிவுட் நடிகர் விக்கி கவுசல். இவர் இந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக இருக்கும் கத்ரீனா கைப்பின் கணவர் ஆவார். நடிகர் விக்கி கவுசல் தற்போது 'பேட் நியூஸ்' படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தை, பிரபல இயக்குனர் ஆனந்த் திவாரி இயக்கியுள்ளார். இதற்கு முன்னதாக விக்கி கவுசல் நடித்திருந்த 'லவ் பேர் ஸ்கொயர் பீட்' படத்தையும் இவர்தான்இயக்கியிருந்தார்.பேட்நியூஸ்படத்தில்திரிப்திடிம்ரிகதாநாயகியாக நடித்துள்ளார்.

சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் மற்றும் முதல் பாடலான 'தௌபா தௌபா' வெளியாகி கவனம் பெற்றன. இந்நிலையில், இப்படத்தின் 2வது பாடலான 'ஜானம்' வெளியாகி உள்ளது. இதனைபார்த்த ரசிகர்கள் பல்வேறு கருத்துகளை தெரிவித்து இப்பாடலை வைரலாக்கி வருகின்றனர். இப்படம் வரும் 19ம் தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெளியான 'தங்கலான்' டிரெய்லர் இணையத்தில் வைரல்



இயக்குனர் பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி. பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

இந்த படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எப் குறித்த கதை என்று இயக்குனர் பா.ரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், விக்ரமின் தோற்றம் மற்றும் மிரட்டலான நடிப்பு உள்ளிட்டவை ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் இந்த படத்தின் டீசர் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில், 'தங்கலான்' படத்தின் டிரெய்லர் வெளியாகி இணையத்தில் வைரலாகி வருகிறது. இத்திரைப்படம் சுதந்திர தினத்தன்று வெளியாக உள்ளதாக இணையத்தில் தகவல் பரவி வருகிறது.

## ஓடிடியில் வெளியாகும் 'நாகேந்திரன்ஸ் ஹனிமூன்ஸ்' தொடர்



பிரபல மலையாள நடிகர் சுராஜ் வெஞ்சாரமூடு. 100 க்கும் மேற்பட்ட மலையாள படங்களில் நடித்துள்ளார். தற்போது, இவர் நிதின் ரெஞ்சி பணிக்கர் இயக்கத்தில் 'நாகேந்திரன்ஸ் ஹனிமூன்ஸ்' என்ற தொடரில் நடித்துள்ளார்.

இதில் ரமேஷ் பிஷாரடி, ஸ்வேதா மேனன், கனி குஸ்ருதி, கிரேஸ் ஆண்டனி, அம்மு அபிராமி, கலாபவன் ஷாஜோன், அலெக்சாண்டர் பிரசாந்த் மற்றும், ஜனார்த்தனன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்து உள்ளனர்.

கடந்த 6ந் தேதி இந்தத் தொடரின் டிரைலர் வெளியானது. அதில் வெளிநாட்டில் வேலை செய்ய ஆசைப்படும் நாகேந்திரன், பல்வேறு மதங்கள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த ஐந்து பெண்களை திருமணம் செய்துகொள்கிறார். பின்னர் அவரது திட்டங்கள் அனைத்தும் சீர்குலைந்து போவதாக அமைந்துள்ளது இந்த தொடர்.

இந்நிலையில், இந்த தொடர் ஓடிடியில் வெளியாகும் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது அதன்படி, வருகிற 19ந் தேதி டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் 'நாகேந்திரன்ஸ் ஹனிமூன்ஸ்' வெளியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியன்2' படக்குழுவுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் 28 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'இந்தியன்' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. தற்போது இந்த படத்தின் இரண்டாம் பாகம் தயாராகி உள்ளது. இந்த படத்தில் கமல்ஹாசன், சித்தார்த், ரகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர், சமுத்திரக்கனி, பாபி சிம்ஹா, டெல்லி கணேஷ், வெண்ணிலா கிஷோர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படம் வரும் 12 ம் தேதி வெளியாக உள்ளது. இந்தசூழலில், இந்தியன்2 திரைப்படத்திற்கு தடை கோரி வர்மக்கலை தலைமை ஆசான் ராஜேந்திரன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நீதிபதி செல்வமகேஸ்வரி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது இயக்குனர் ஷங்கர் சார்பில் ஆஜரான வக்கீல், இந்த வழக்கு குறித்து பதில் அளிக்க 2 வாரம் அவகாசம் வேண்டும் என கோரினார். அதற்கு நீதிபதி, 'இந்தியன் 2' படம் வருகிற 12ந்தேதி ரிலீஸ் செய்யப்பட உள்ளதால், விரைவாகபதில்மனுதாக்கல்செய்யும்படி உத்தரவிட்டு, விசாரணையைநாளைக்குஒத்திவைத்தார்.

அதனுடன், நீதியின் நலன் கருதி இந்த வழக்கில் தயாரிப்பாளர் சுபாஷ்கரண், நடிகர் கமல் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராக வேண்டும் என்றும் தயாரிப்பாளர் சுபாஸ்கரன், நடிகர் கமல் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகாவிட்டால் அவர்கள் தரப்பு வாதத்தை கேட்காமலேயே உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் மதுரை மாவட்ட உரிமைகள் நீதிமன்றம் இந்தியன்2 படக்குழுவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.



## வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்: டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சு தேர்வு

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடரின் முதல் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் இன்று தொடங்குகிறது.இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.அதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி வெஸ்ட் இண்டீஸ் முதலில் பேட்டிங் செய்கிறது.

இங்கிலாந்து: ஜாக் கிராவ்லி, பென் டக்கெட், ஆலி போப், ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஜாமி சுமித், கிறிஸ் வோக்ஸ், அட்கின்சன், சோயிப் பஷீர், ஜேம்ஸ் ஆண்டர்சன்.

வெஸ்ட் இண்டீஸ்: கிரேக் பிராத்வைட் (கேப்டன்), மைக்கேல் லூயிஸ், கிர்க் மெக்கென்சி, அலிக் அதானாஸ், கவேம் ஹாட்ஜ், ஜேசன் ஹோல்டர், ஜோசுவா டா சில்வா (விக்கெட் கீப்பர்), குடகேஷ் மோட்டி, அல்சாரி ஜோசப், ஷமர் ஜோசப், ஜெய்டன் சீல்ஸ்.

## கோபா அமெரிக்க கால்பந்து: அரையிறுதியில் உருகுவே கொலம்பியா அணிகள் இன்று மோதல்



கோபா அமெரிக்க கால்பந்து: அரையிறுதியில் உருகுவே கொலம்பியா அணிகள் நாளை மோதல்

48வது கோபா அமெரிக்க கால்பந்து போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இந்த தொடரின் லீக், , காலிறுதி ஆட்டங்களின் முடிவில் அர்ஜெண்டினா, கனடா, உருகுவே, கொலம்பியா அணிகள் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறின.

இதில் இன்று நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் கனடா அணியை வீழ்த்தி அர்ஜெண்டினா இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்த நிலையில், நாளை நடைபெற உள்ள 2வது அரையிறுதியில் உருகுவே கொலம்பியா அணிகள் மோத உள்ளன . இந்திய நேரப்படி நாளை அதிகாலை 5.30 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது.



## பாரீஸ் ஒலிம்பிக்; பதக்கம் வெல்லுமா ? சாத்விக் சாய்ராஜ் சிராக் ஷெட்டி இணை

33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வரும் 26ந்தேதி கோலாகலமாக தொடங்குகிறது. இந்த போட்டிக்கு இந்தியா சார்பில் இதுவரை 124 பேர் தகுதி பெற்றுள்ளனர். இந்த தொடருக்கு இன்னும் 16 நாட்கள் மட்டுமே உள்ளதால் இதன் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கு தற்போதே அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இந்த ஒலிம்பிக் தொடரில் பேட்மிண்டனில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் களம் காணும் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை பதக்கம் வெல்லுமா என ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு நிலவுகிறது.

சிங்கப்பூர் ஓபன் போட்டியில் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை முதல் சுற்றில் தோல்வியடைந்த பிறகு வேறு தொடர்களில் பங்கேற்கவில்லை. கடந்த ஒலிம்பிக் போட்டியில் குரூப் போட்டிகள் மூன்றில் 2ல் வெற்றி பெற்று காலிறுதி வாய்ப்பை நூலிழையில் தவறவிட்டனர்.

ஆனால், இந்த முறை பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்காக கடினமாகத் தயாராகியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் அவர்கள் பதக்கம் வெல்ல அதிகம் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

## டி.என்.பி.எல்: திருப்பூரை வீழ்த்தி சேப்பாக் அபார வெற்றி



8வது தமிழ்நாடு பிரிமீயர் லீக் (டி.என்.பி.எல்.) டி20 கிரிக்கெட் தொடர் சேலத்தில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் 8 அணிகள் கலந்து கொண்டுள்ளன. லீக் சுற்றில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறும்.

இந்நிலையில், டி.என்.பி.எல். தொடரில் இன்று நடைபெற்ற 8வது லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் திருப்பூர் தமிழன்ஸ் அணிகள்மோதின. இப்போட்டியில்டாஸ்சென்ற திருப்பூர் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து சேப்பாக் அணியின் தொடக்க வீரர்களாக சந்தோஷ், ஜெகதீசன் களமிறங்கினர். சந்தோஷ் 8 ரன்னில் ஆட்டமிழந்த நிலையில் அடுத்து வந்த கேப்டன் அபராஜித் 9 ரன்னில் அவுட் ஆனார். அடுத்து வந்த பிரதோஷ் தொடக்க வீரர் ஜெகதீசனுடன் ஜோடி சேர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஜெகதீசன் 36 ரன்னில் அவுட் ஆன நிலையில் பிரதோஷ் அரைசதம் கடந்தார். இறுதியில் சேப்பாக் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 157 ரன்கள் சேர்த்தது. சிறப்பாக ஆடிய பிரதோஷ் 46 பந்துகளில் 67 ரன்கள் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். திருப்பூர் தரப்பில் முகமது அலி அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து,157ரன்கள்எடுத்தால்வெற்றிஎன்றஇலக்குடன்திருப்பூர்அணியின்தொடக்கவீரர்களாகராதாகிருஷ்ணன், துஷார் களமிறங்கினர். ராதாகிருஷ்ணன் 15 ரன்னில் ஆட்டமிழந்த நிலையில் துஷார் 20 ரன்னில் அவுட் ஆனார். அடுத்துவந்த அமித் 14 ரன்களில் அவுட் ஆனார். பின்னர் களமிறங்கிய கணேஷ் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், மற்ற வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறின. கடைசி வரை போராடிய கணேஷ் 35 பந்துகளில் 61 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் திருப்பூர் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 142 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் திருப்பூரை 15 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அபார வெற்றி பெற்றது. இதையடுத்து, நடப்பு டி.என்.பி.எல். தொடரில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் முதல் வெற்றியை பதிவு செய்தது.

## 3வது டி20: கில் அரைசதம்... இந்திய அணி 182 ரன்கள் குவிப்பு

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடரில் இதுவரை 2 போட்டிகள் முடிந்துள்ள நிலையில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி ஹராரேவில் இன்று நடைபெறுகிறது.இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில், டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் கில் பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி, இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்க வீரர்களாக ஜெய்ஸ்வால் , கில் களமிறங்கினர். தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடி ரன்கள் குவித்தனர். தொடக்க விக்கெட்டுக்கு 67 ரன்கள் சேர்த்த நிலையில் ஜெய்ஸ்வால் 36 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.தொடர்ந்து அபிஷேக் ஷர்மா 10 ரன்களுக்கு வெளியேறினார். மறுபுறம் கில் அரைசதம் அடித்து அசத்தினர் .



தொடர்ந்து கில் ருதுராஜ் இணைந்து சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தனர். கில் 66 ரன்களுக்கு ஆட்டமிழந்தார் . அதிரடியாக விளையாடிய ருதுராஜ் கெயிக்வாட் 49 ரன்களில் வெளியேறினார்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 182 ரன்கள் எடுத்தது . தொடர்ந்து 183 ரன்கள் இலக்குடன் ஜிம்பாப்வே அணி விளையாடுகிறது.



தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

விளக்கம்:
தீயசெயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத் தீயச் செயல்கள் தீயைவிடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்படும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.